**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெருந்துறை**

**முன்னிலை : திரு.என்.மூர்த்தி, B.Com.,B.L.,**

**குற்றவியல் நீதித்துறை நடுவர், பெருந்துறை**

**2026 ம் வருடம் ஜுன் திங்கள் 06 ம் நாள் சனி கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057, ஸ்ரீ பராபவ வருடம் வைகாசி திங்கள் 23 ம் நாள்**

**ஆண்டுப் பட்டியல் வழக்கு எண். 596/2025**

CNR No. TNED120033202025

அரசுக்காக : சிறப்பு உதவி ஆய்வாளர், சென்னிமலை .

காவல் நிலைய குற்ற எண்.85/2022

இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 323, 324, 326, 506(ii). ... குற்றம் முறையிடுபவர்

-எதிர்-

1. மீனா (24/2022), த/பெ. பாலசுப்பிரமணி

34, மேற்கு புதுப்பாளையம், R.ராமலிங்கபுரம் அஞ்சல்,

சென்னிமலை.

2. ராஜா (42/2022), த/பெ. ஆரோக்கியசாமி

ரோஸ் கார்டன், ஒட்டர்பாளையம்,

படியூர் அஞ்சல், திருப்பூர் மாவட்டம்.

3. பாபு (30/2022), த/பெ. செல்வராஜ்

29, புதூர் தோட்டம், 2 வது வீதி,

தாராபுரம் ரோடு, திருப்பூர் மாவட்டம்.

4. ரங்கராஜ் (எ) ரங்கராஜன் (32/2022), த/பெ. சரவணன்

16 B, நேதாஜி நகர், செரிப் காலனி, திருப்பூர்.

5. ஜீவா (29/2022), த/பெ. துரைசாமி

5/705, அமராவதிபாளையம், பி.கே.பாளையம் பிரிவு,

4 வது வீதி, முத்தனம்பாளையம், திருப்பூர். .... குற்றம் சாட்டப்பட்டவர்கள்

## CASE SUMMARY

## RULE 106 of CRP

| S.No | PARTICULARS |
|---|---|
| 01 | Name of the Parties-**Complainant: Special Sub - Inspector of Police, Chennimalai Police Station, Erode (Dt).**<br>**Accused :1.Meena, W/o. Balasubramani**<br>**2.Raja, S/o.Arokyasamy**<br>**3.Babu, S/o.Selvaraj**<br>**4.Rangaraj @ Rangarajan, S/o.Saravanan**<br>**5.Jeeva, S/o.Duraisamy** |



N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.06 18:47:57 +0530

| | | |
|---|---|---|
| 02 | Accused Age | A1 - 24 years<br>A2 – 42 years<br>A3 – 30 years<br>A4 – 32 years<br>A5 – 29 years |
| 03 | Father's Name/W/o./D/o. | A1 - W/o. Balasubramani<br>A2 – S/o.Arokyasamy<br>A3 – S/o.Selvaraj<br>A4 – S/o.Saravanan<br>A5 – S/o.Duraisamy |
| 04 | Caste or Religion | -- |
| 05 | Calling | A1, A2, A5 – Coolie<br>A3, A4 – -- |
| 06 | Residence | A1 – 34, Merku Puthuppalayam, N.Ramalingapuram Post, Chennimalai.<br>A2 – Rose Garden, Ottarpalayam, Padiyur Post, Trippur Distrct.<br>A3 - 29, Pudur Thottam, 2nd Street, Dharapuram Road, Tiruppur District.<br>A4 – 16B, Nethaji Nagar, Serif Colony, Tiruppur.<br>A5 – 5/705, Amaravathipalayam, P.K.Palayam Pirivu, 4th Street, Muthanampalayam. Tiruppur District. |
| 07 | Taluk | A1 – Perundurai, A2 to A5 - Tiruppur |
| 08 | Date of Occurrence | 29.03.2022 |
| 09 | Date of filing | 29.10.2025 |
| 10 | Apprehension - Arrest | A1 – 30.03.2022<br>A2 – 30.03.2022<br>A3, A4 – 04.05.2022 - Anticipatory Bail<br>A5 – 13.05.2022 - Anticipatory Bail |
| 11 | Release on bail | A1 – 30.03.2022<br>A2 – 13.04.2022<br>A3, A4 – 04.05.2022 - Anticipatory Bail<br>A5 – 13.05.2022 - Anticipatory Bail |
| 12 | Commitment | Not Applicable |
| 13 | Commencement of Trial | 25.05.2026 |
| 14 | Closure of Trial | 03.06.2026 |
| 15 | Sentence of Order | Acquittal- A1 U/s. 147, 294(b), 324 IPC.<br>A2 U/s. 147, 323, 506(ii) IPC.<br>A3 U/s.147, 324, 506(ii) IPC.<br>A4 U/s. 147, 323 IPC.<br>A5 U/s. 147, 326 IPC. |
| 16 | Service of copy of Judgment | No. |
| 17 | **Case Summary :** Period of Remand of the accused | A2 – 30.03.2022 - 13.04.2022 |
| 18 | Date of filing of the final report | 29.10.2025 |
| 19 | Date of Questioning under section 240 of Cr.P.C., | 20.05.2025 |
| 20 | Date of examination accused u/s.313(1)(b) of Cr.P.C.,/ 351(1)(b) of BNSS., | 03.06.2026 |



N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.06 18:48:04 +0530

<table>
<tr><td>21</td><td>Miscellaneous Petition and their results</td><td>1) MP.No.1/2026 – 320 (2) Crpc petition dismissed on 27.05.2026.<br>2) MP.No.3/2026 – 311 Crpc petition allowed on 01.06.2026.</td></tr>
<tr><td>22</td><td>Date of examination in Chief and Cross</td><td><table><tr><td>WITNESS</td><td>CHIEF</td><td>CROSS</td></tr><tr><td>PW1</td><td>27.05.2026</td><td>Hostile</td></tr><tr><td>PW2</td><td>27.05.2026</td><td>Hostile</td></tr><tr><td>PW3</td><td>01.06.2026</td><td>01.06.2026</td></tr></table></td></tr>
<tr><td>23</td><td>Details of abscondence of accused his appearance/ Production</td><td>Nil</td></tr>
<tr><td>24</td><td>Grant of stay by Superior Court and the results thereof</td><td>Nil</td></tr>
</table>

இந்த வழக்கு 29.10.2025 அன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இந்த நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்த போது அரசுத் தரப்பில் அரசு உதவி குற்றத்துறை கற்றறிந்த வழக்குரைஞர் செல்வி. P. ஜெயந்தி அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.A.அமர்நாத் அவர்கள் முன்னிலையாகியும் வழக்காடியதில் இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு கோப்புகள் மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீ ர் ப் பு ரை</u>**

புகார்தாரரான துரைசாமியின் வீட்டிற்கு 1 முதல் 5 எதிரிகள் சட்டவிரோதமாக ஒன்று கூடி கலகம் செய்ய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடன் TN 10 BB 9829 என்ற காரில் சென்றதாகவும், 1ம் எதிரி அ.சா.1 சம்பூரணத்தை பார்த்து தகாத வார்த்தையால் திட்டி பொது ஜனஅமைதிக்கு பங்கம் விளைவித்ததாகவும், 1ம் எதிரி இரும்புக்கம்பியால் அ.சா.1ன் இடது கால் தொடையில் அடித்து சொற்ப காயத்தையும், 3 ம் எதிரி புகார்தாரரின் வலது புற அல்லையில் பனியன் பிசிறு வெட்டும் கத்தியால் குத்தி ரத்தகாயத்தையும் ஏற்படுத்தியதாகவும், 2ம் எதிரி அ.சா.2 பாலசுப்பிரமணியை உயிர்நாடியில் எட்டி உதைத்து கீழே தள்ளியபோது தப்பி ஓடிய அ.சா.2 யை 4ம் எதிரி காலால் எட்டி உதைத்து சாதாரண காயத்தையும் ஏற்படுத்தியதாகவும், 2ம் எதிரி அ.சா.1க்கு கொலைமிரட்டல் விடுத்தபோது தடுக்க முற்பட்ட புகார்தாரர் துரைசாமியை 3ம்



N MOORTHY
Digitally signed by N MOORTHY
Date: 2026.06.06 18:48:13 +0530

எதிரி பிசிறு வெட்டும் கத்தியால் வலது அல்லையில் குத்தி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், 5 ம் எதிரி புகார்தாரர் துரைசாமியின் இடது தோள்பட்டையில் தடியால் அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாகவும், அதனால் 1 ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 324 ன் படியும், 2 ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 147, 323, 506(ii)ன் படியும், 3 ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 147, 324, 506(ii)ன் படியும், 4 ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 147, 323 ன் படியும், 5 ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 147, 326 ன் படியும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என சென்னிமலை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) சென்னிமலை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை படி1 ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 324 ன் படியும், 2 ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 323, 506(ii)ன் படியும், 3 ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 324, 506(ii)ன் படியும், 4 ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 323 ன் படியும், 5 ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 326 ன் படியும் இவ்வழக்கு கோப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

3) எதிரிகள் முன்னிலையானவுடன் அவர்களுக்கு கு.வி.மு.ச. பிரிவு 207(1)ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கி எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு 1ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 324 ன் படியும், 2 ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 323, 506(ii)ன் படியும், 3 ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 324, 506(ii)ன் படியும், 4 ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 323 ன் படியும், 5 ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 326 ன் படியும் குற்றச்சாட்டு வனையப்பட்டு எதிரிகளிடம் குற்றத்தை பற்றி வினவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்தார்கள். எனவே, அரசுத் தரப்பில் சாட்சிகளை விசாரிக்க இந்த வழக்கில் வகை செய்யப்பட்டது.

4) இந்த வழக்கில் அரசுத் தரப்பில் சாட்சிய பட்டியலில் கண்ட 11 சாட்சிகளில் 3 சாட்சிகள் மட்டுமே விசாரிக்கப்பட்டுள்ளார்கள். இறுதி அறிக்கையில் கண்டுள்ள மற்ற சாட்சிகளை அரசுத்தரப்பு வழக்கறிஞர் சாட்சிய விசாரணையிலிருந்து விலக்கியுள்ளார். அரசுத் தரப்பில்



N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.06 18:48:18 +0530

சான்றாவணம் 1 முதல் 15 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசுத் தரப்பில் சான்று பொருள்கள் இரண்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள், ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் முன்னிலைப்படுத்தவில்லை.

**5) அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:**

5.1) இவ்வழக்கின் வாதி மற்றும் புகார்தாரரான துரைசாமி என்பவர் மேற்கு புதுப்பாளையத்தில் குடியிருந்து கொண்டு ஈச்சர் வேன் ஓட்டி வருகிறார். புகார்தாரர் துரைசாமியின் வீட்டிற்கு அருகில் அவரது தங்கை மகன்களான அ.சா.2 பாலசுப்பிரமணியும், மோகன்ராஜ் ஆகியோர் குடியிருந்து வருகிறார்கள். அ.சா.2 பாலசுப்பிரமணிக்கும், 2 ம் எதிரியின் மகளான 1ம் எதிரிக்கும் திருமணமாகி 2 வயதில் ஆண் குழந்தை உள்ளது. இந்நிலையில் அ.சா.2 க்கும், 1ம் எதிரிக்கும் குடும்பத்தகராறு ஏற்பட்டு 1ம் எதிரி அவரது பெற்றோர் வீட்டில் இருந்து வந்த நிலையில், கடந்த 28.03.2022 ஆம் தேதி 1ம் எதிரி அவரது கணவரான அ.சா.2 ன் வீட்டிற்கு சென்று வாய்தகராறு செய்ததாகவும், 1ம் எதிரிக்கு காலில் அடிப்பட்டுள்ளது. புகார்தாரர் துரைசாமியும், அவரது மனைவி அ.சா.1ம் சொல்லிக்கொடுத்து தான் 1ம் எதிரிக்கும், அ.சா.2 ற்கும் சண்டை வருவதாக சொல்லி 1ம் எதிரி புகார்தாரர் துரைசாமியின் மனைவியான அ.சா.1 யை கெட்ட வார்த்தையால் திட்டியதால் அ.சா.1 சம்பூரணம் 1ம் எதிரியை கையால் அடித்துள்ளார். இந்நிலையில் கடந்த 29.03.2022 ம் தேதி இரவு 7.00 மணிக்கு புகார்தாரர் துரைசாமியும், அ.சா.2 வீட்டில் இருந்தபோது 1, 2, 4 எதிரிகள் மற்றும் 1ம் எதிரியின் அம்மா ராஜேஷ்வரி ஆகியோர் TN 10 BB 9829 என்ற காரிலும், 1ம் எதிரியின் மச்சானான 3 ம் எதிரியும் மற்றும் 4 ம் எதிரியும் வேறு வண்டியிலும் வந்துள்ளார்கள். 1ம் எதிரி ரோட்டில் நின்று அ.சா.1 யை பார்த்து ஏண்டி தேவிடியா நேற்று என்னை அடித்தீர்கள், இப்ப அடியுங்கள் பார்க்கலாம் என்று சொல்லிக் கொண்டு ஒரு கம்பியை எடுத்து அ.சா.2 ன் இடது கால் தொடையில் அடித்தபோது அங்கிருந்த அ.சா.2 யை 3 ம் எதிரி உயிர் நாடியில் காலால் எட்டி உதைத்து கீழே தள்ளி ஒரு கல்லை எடுத்து கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி துரத்தியபோது தப்பி ஓடிய அ.சா.2 யை 4 ம்



N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.06 18:48:24 +0530

எதிரி காலில் எட்டி உதைத்தை புகார்தாரர் துரைசாமி தடுக்க சென்றபோது அவரை 3ம் எதிரி பனியன் பிசிறு வெட்டும் கத்தியால் உன்னை கொன்றால் தான் பிரச்சனை தீரும் என்று சொல்லி வயிற்றின் வலது அல்லையில் குத்தியுள்ளார். 5ம் எதிரி புகார்தாரர் துரைசாமியின் தோள்பட்டையில் ஒரு தடியால் அடித்தபோது அவர்கள் சத்தம் போட்டதை கேட்டு பக்கத்து வீட்டுக்காரர்கள் வருவதை பார்த்து எதிரிகள் அங்கிருந்து சென்றுள்ளார்கள். பின்னர் புகார்தாரர் துரைசாமி, அ.சா.1, அ.சா.2 ஆகியோர் சேனிடோரியம் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் சேர்ந்து உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்துள்ளார்கள்.

5.2) பின்னர் கடந்த 29.03.2022ம் தேதி சென்னிமலை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.உமாபதி என்பவர் காவல் நிலைய பொறுப்பில் இருந்த போது ஈரோடு அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற அசால்ட் இன்டிமேசன் பேரில் மருத்துவமனைக்கு சென்று மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த புகார்தாரர் துரைசாமி என்பவரை மேற்படி சம்பவம் குறித்து விசாரித்து அ.சா.ஆ.2 புகார் வாக்குமூலம் பெற்று காவல் நிலையம் வந்து சென்னிமலை காவல் நிலைய குற்ற எண்.85/2022 சட்டபிரிவுகள் 294(b), 323, 324, 506(2)ன் இதசவின்படி அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையுடன் புகார் வாக்குமூலத்தையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

5.3) பின்னர் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.உமாபதி அவர்கள் வழக்குகோப்பின் ஒரு நகலை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 30.03.2022ம் தேதி காலை 6.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரமேஷ், மோகனசுந்தரம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் வரைந்து, அ.சா.ஆ.5 பார்வை மகசர் தயார் செய்து சாட்சிகளின் கையொப்பம் பெற்றுள்ளார். பின்னர் அதே தேதியன்று அதே சாட்சிகள் முன்னிலையில் காலை 8.00 மணிக்கு அ.சா.பொ.1 சுமார் 74 செ.மீ நீளமுள்ள இரும்பு கம்பி - 1,



N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.06 18:48:29 +0530

அ.சா.பொ.2 உடைந்த நிலையில் உள்ள சிவப்பு கலர் கைப்பிடி போட்ட பிசிறு வெட்டும் கத்தி - 1 ஆகியவற்றை அ.சா.ஆ.6 கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளார்.

5.4) பின்னர் அன்றைய தினமே மதியம் 12.00 மணிக்கு TN 10 BB 9829 என்ற பதிவு எண் கொண்ட Hyundai Red Taxi காரினை அ.சா.ஆ.7 கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளார். பின்னர் சாட்சிகள் புகார்தாரர் துரைசாமி, அ.சா.1 சம்பூரணம், அ.சா.2 பாலசுப்பிரமணியம், சாட்சி சதீஷ், சாட்சி விக்னேஷ், சாட்சி சரவணன் ஆகியோரை விசாரித்து அவர்களது வாக்குமூலத்தை தனித்தனியே பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரிகளை பல இடங்களில் தேடி வந்த நிலையில் 3 , 4 மற்றும் 5 ம் எதிரிகள் மாண்பமை ஈரோடு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று விட்டதால் அவர்களை கைது செய்யவில்லை. 30.03.2022 ம் தேதி சென்னிமலை -- காங்கேயம் நொய்யல் சோதனை சாவடி அருகில் வைத்து 1 மற்றும் 2 எதிரிகளை கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து பின்னர் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் வழக்கு சொத்துக்களான அ.சா.பொ.1 சுமார் 74 செ.மீ நீளமுள்ள இரும்பு கம்பி - 1, அ.சா.பொ.2 உடைந்த நிலையில் உள்ள சிவப்பு கலர் கைப்பிடி போட்ட பிசிறு வெட்டும் கத்தி - 1 மற்றும் TN 10 BB 9829 என்ற பதிவு எண் கொண்ட Hyundai Red Taxi கார் ஆகியவற்றை அ.சா.ஆ.8, அ.சா.ஆ.9 படிவம் 91 ல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

5.5) பின்னர் 15.06.2022 ம் தேதி அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அ.சா.1 சம்பூர்ணம், அ.சா.2 பாலசுப்பிரமணி ஆகியோருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு. கமல்பதி என்பவரை விசாரித்து அ.சா.ஆ.10, அ.சா.ஆ.12 விபத்து பதிவேடுகள் மற்றும் அ.சா.ஆ.11, அ.சா.ஆ.13 காயச்சான்றிதழ்கள் பெற்று அவரது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். பின்னர் 15.06.2022 ம் தேதி அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த புகார்தாரர் துரைசாமி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. கமல்பதி அவர்களை விசாரித்து அ.சா.ஆ.14 காயச்சான்றிதழ் பெற்று அவரது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.



N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.06 18:48:36 +0530

பின்னர் மருத்துவரை விசாரணை செய்ததில் புகார்தாரர் துரைசாமி, அ.சா.1 சம்பூர்ணம் மற்றும் அ.சா.2 பாலசுப்பிரமணியம் ஆகியோர்களுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று மருத்துவர் கருத்துரை வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவை 147, 294(b), 323, 324, 326, 506(2) இதச ஆக மாறுதல் செய்து அ.சா.ஆ.15 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.உமாபதி அவர்கள் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**6) கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் படி எதிரிகளிடம் கேட்டல்**

அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிகளுக்கு பாதகமாகத் தோன்றும் பகுதிகளைத் தொகுத்து கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ)ன் படி வினவியபோது எதிரிகள் அரசுத் தரப்பு சாட்சியத்தை பொய் என்று கூறினார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

**7) தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை**:

அரசு தரப்பில் 1ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 324 ன் படியும், 2ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 323, 506(ii)ன் படியும், 3ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 324, 506(ii)ன் படியும், 4ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 323ன் படியும், 5ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 326ன் படியான குற்றச்சாட்டானது தகுநிலை ஐய்யப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பது குறித்து இந்நீதிமன்றத்தில் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

**8) பிரச்சனைக்குரிய தீர்வு** :

8.1) இரு தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள், வழக்கு கோப்புகள் மற்றும் வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.06 18:48:42 +0530

8.2) அ.சா.1, அ.சா.2 பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் கண்ணுற்ற சாட்சிகள் ஆவார்கள். அ.சா.3 சிறப்பு உதவி ஆய்வாளரானவர் புலன் விசாரணை அதிகாரியான சிறப்பு உதவி ஆய்வாளரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் பற்றி நன்கு பரிட்சையமான நபர் ஆவார்.

8.3) அரசு தரப்பில் புகார்தாரரான துரைசாமியின் வீட்டிற்கு 1 முதல் 5 எதிரிகள் சட்டவிரோதமாக ஒன்று கூடி கலகம் செய்ய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடன் TN 10 BB 9829 என்ற காரில் சென்றதாகவும், 1 ம் எதிரி அ.சா.1 சம்பூரணத்தை பார்த்து தகாத வார்த்தையால் திட்டி பொது ஜனஅமைதிக்கு பங்கம் விளைவித்ததாகவும், 1ம் எதிரி இரும்புக்கம்பியால் அ.சா.1 ன் இடது கால் தொடையில் அடித்து சொற்ப காயத்தையும், 3 ம் எதிரி புகார்தாரரின் வலது புற அல்லையில் பனியன் பிசிறு வெட்டும் கத்தியால் குத்தி ரத்தகாயத்தையும் ஏற்படுத்தியதாகவும், 2 ம் எதிரி அ.சா.2 பாலசுப்பிரமணியை உயிர்நாடியில் எட்டி உதைத்து கீழே தள்ளியபோது தப்பி ஓடிய அ.சா.2 யை 4 ம் எதிரி காலால் எட்டி உதைத்து சாதாரண காயத்தையும் ஏற்படுத்தியதாகவும், 2 ம் எதிரி அ.சா.1 க்கு கொலைமிரட்டல் விடுத்தபோது தடுக்க முற்பட்ட புகார்தாரர் துரைசாமியை 3 ம் எதிரி பிசிறு வெட்டும் கத்தியால் வலது அல்லையில் குத்தி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், 5 ம் எதிரி புகார்தாரர் துரைசாமியின் இடது தோள்பட்டையில் தடியால் அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாக அரசு தரப்பில் எதிரிகள் மீது இவ்வழக்கு முன் வைக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் இவ்வழக்கு பொய் வழக்கு என மறுக்கப்பட்டுள்ளது.

8.4) அ.சா.3 சாட்சியானவர் புலன் விசாரணை அதிகாரியான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.உமாபதி அவர்கள் சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டும், வழக்கு சொத்தை கைப்பற்றியும், சாட்சிகளை விசாரித்தும் மேற்கொண்ட புலன் விசாரணையில் எதிரிகள் இவ்வழக்கு குற்றம் செய்திருப்பது உறுதி செய்யப்பட்டு எதிரிகள் மீது இவ்வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

N MOORTHY
Digitally signed by N MOORTHY
Date: 2026.06.06 18:48:48 +0530

8.5) இவ்வழக்கின் பாதிக்கப்பட்ட நபரான நிகழ்நிலை புகார்தாரரர் துரைசாமி என்பவர் வழக்கு விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்பே இறந்துவிட்டார். ஆதலால் இவ்வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மற்ற நபர்கள் மற்றும் நேரில் பார்த்த கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்துதான் எதிரிகள் மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபணம் செய்துள்ளதா என்பதை தீர்மானிக்க முடியும்.

8.6) அரசு தரப்பில் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் கண்ணுற்ற சாட்சிகளாக முன்வைக்கப்பட்ட அ.சா.1, அ.சா.2 சாட்சிகள் தங்களது முதன்மை சாட்சியத்தில் புகார் வாக்குமூலத்தை துரைசாமி பெருந்துறை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது சென்னிமலை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் பெற்றுச் சென்ற விவரம் தங்களுக்கு தெரியும் என்றும், புகார் வாக்குமூலத்தில் என்ன உள்ளது என்ற விவரம் தங்களுக்கு தெரியாது என்றும், சம்பவத்தை பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

8.7) மேற்படி பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1, அ.சா.2 சாட்சிகள் அரசு தரப்பில் முன்வைத்தது போல் புகார்தாரரான துரைசாமியின் வீட்டிற்கு 1 முதல் 5 எதிரிகள் சட்டவிரோதமாக ஒன்று கூடி கலகம் செய்ய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடன் TN 10 BB 9829 என்ற காரில் சென்றதாகவும், 1 ம் எதிரி அ.சா.1 சம்பூரணத்தை பார்த்து தகாத வார்த்தையால் திட்டி பொது ஜனஅமைதிக்கு பங்கம் விளைவித்ததாகவும், 1ம் எதிரி இரும்புக்கம்பியால் அ.சா.1ன் இடது கால் தொடையில் அடித்து சொற்ப காயத்தையும், 3ம் எதிரி புகார்தாரரின் வலது புற அல்லையில் பனியன் பிசிறு வெட்டும் கத்தியால் குத்தி ரத்தகாயத்தையும் ஏற்படுத்தியதாகவும், 2ம் எதிரி அ.சா.2 பாலசுப்பிரமணியை உயிர்நாடியில் எட்டி உதைத்து கீழே தள்ளியபோது தப்பி ஓடிய அ.சா.2 யை 4ம் எதிரி காலால் எட்டி உதைத்து சாதாரண காயத்தையும் ஏற்படுத்தியதாகவும், 2ம் எதிரி அ.சா.1க்கு கொலைமிரட்டல் விடுத்தபோது தடுக்க முற்பட்ட



N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.06 18:48:54 +0530

புகார்தாரர் துரைசாமியை 3 ம் எதிரி பிசிறு வெட்டும் கத்தியால் வலது அல்லையில் குத்தி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், 5 ம் எதிரி புகார்தாரர் துரைசாமியின் இடது தோள்பட்டையில் தடியால் அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காமல் அ.சா.1, அ.சா.2 சாட்சியானவர்கள் அவர்களது சாட்சியத்தில் புகார் வாக்குமூலத்தை துரைசாமி பெருந்துறை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது சென்னிமலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் அவர்கள் பெற்றுச் சென்ற விவரம் தங்களுக்கு தெரியும் என்றும், புகார் வாக்குமூலத்தில் என்ன உள்ளது என்ற விவரம் தங்களுக்கு தெரியாது என்றும், சம்பவத்தை பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

8.8) அ.சா.1. அ.சா.2 சாட்சிகள் மேற்படி விதம் அளித்த சாட்சியத்தை கொண்டு பார்க்கையில் அரசு தரப்பில் உண்மையிலேயே இவ்வழக்கு சம்பவம் நிகழ்ந்ததா என்பது சந்தேகத்திற்கு இடமளிப்பதாக உள்ளது என்றே இந்த நீதிமன்றம் கருதுகின்றது.

8.9) அ.சா.1, அ.சா.2 சாட்சிகள் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் கண்ணுற்ற சாட்சிகள் என அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள நிலையில் அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ் சாட்சியம் அளித்து நிலையிலும், மேற்படி சாட்சியங்களிலிருந்து பார்க்கையில் அரசு தரப்பில் முன்வைத்த வழக்கு குற்றத்தை பொறுத்து அந்த சாட்சிகள் எவரும் அரசு தரப்பு வழக்கிற்கு எவ்வித சந்தேகமும் ஏற்படாத வகையில் எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்கவில்லை. இந்நிலையில் இது அரசு தரப்பு வழக்கிற்கு மிகுந்த பலவீனத்தை ஏற்படுத்துகின்றது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

8.10) அ.சா.3 சாட்சியானவர் புலன் விசாரணை அதிகாரியான சிறப்பு உதவி ஆய்வாளர் மேற்கொண்ட புலன் விசாரணையில் எதிரிகள் இவ்வழக்கு குற்றத்தை புரிந்ததாக தெரிய வந்ததன் அடிப்படையில் எதிரிகள் மீது புலன் விசாரணை அதிகாரி இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்திருப்பினும் அவற்றை எவ்வித சந்தேகத்திற்கும் இடமளிக்காத வகையில் மற்ற சாட்சியங்கள் மூலம் அரசு தரப்பு நிரூபணம் செய்திருக்க வேண்டும்.

N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.06 18:49:00 +0530

8.11) அ.சா.1, அ.சா.2 ன் மேற்படி சாட்சியங்கள் ஆனது எதிரிகளுக்கு எதிராக அரசு தரப்பில் முன் வைக்கப்பட்ட குற்றத்தை நிரூபணம் செய்யும் அளவிற்கு இல்லை என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது. இந்நிலையில் மற்ற சாட்சியங்கள் மூலம் அரசு தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய ஏதுவாக அரசு தரப்பில் முன் வைக்கப்பட்ட மற்ற சாட்சிகளை அரசு தரப்பில் விசாரிக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக வேறு சாட்சியங்கள் ஏதும் அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்படவில்லை.

8.12) அ.சா.1 முதல் அ.சா.3 ன் சாட்சியத்தில் இருந்து பார்க்கையில் அரசு தரப்பு வழக்கை உரிய முறையில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமளிக்காத வகையில் நிரூபணம் செய்ய அரசு தரப்பு தவறியுள்ளது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கின்றது. ஆதலால் இந்த சந்தேகத்தின் பலன் எதிரிகளுக்கு கிடைக்கத்தக்கதாகும்.

8.13) மேற்படி சாட்சிய சான்றாவண பரிசீலனைகளில் இருந்து இவ்வழக்கில் 1ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 324 ன் படியும், 2ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 323, 506(ii)ன் படியும், 3ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 324, 506(ii)ன் படியும், 4ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 323 ன் படியும், 5ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 326 ன் படியுமான குற்றத்தை எதிரிகள் தான் செய்தார்கள் என்பதை எவ்வித சந்தேகத்திற்கு இடமின்றி உரிய சாட்சிய, சான்றாவணங்களின் மூலம் நிரூபணம் செய்ய அரசுத்தரப்பு தவறியதாகவே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8.14) எனவே, மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிரான அரசு தரப்பு குற்றம் உரிய சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் படி சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு அளித்து 1ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 324 ன் கீழும், 2ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 147, 323, 506(ii)ன் கீழும், 3 ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 147, 324, 506(ii)ன் கீழும், 4 ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 147, 323



N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.06 18:49:06 +0530

ன் கீழும், 5 ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 147, 326 ன் கீழும் குற்றவாளிகள் அல்ல என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9) இறுதியாக,**

i) முடிவாக 1 ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 324 ன் கீழும், 2 ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 147, 323, 506(ii)ன் கீழும், 3 ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 147, 324, 506(ii)ன் கீழும், 4 ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 147, 323 ன் கீழும், 5 ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 147, 326 ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து எதிரிகளை குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

ii) எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைப் பத்திரங்களை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

iii) வழக்கு சொத்தான அ.சா.பொ.1 சுமார் 74 செ.மீ நீளமுள்ள இரும்பு கம்பி - 1, அ.சா.பொ.2 உடைந்த நிலையில் உள்ள சிவப்பு கலர் கைப்பிடி போட்ட பிசிறு வெட்டும் கத்தி - 1 ஆகியவை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு **பி.ஆர்.எண்.340/2025** என்ற எண்ணில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. மேல் முறையீடு இருப்பின் மேல்முறையீடு உத்தரவுப்படி நடக்கவும், மேல் முறையீடு இல்லையெனில் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு அழித்துவிடவும் உத்தரவிடப்படுகிறது.

iV) இவ்வழக்கின் மற்றொரு வழக்கு சொத்தான TN 10 BB 9829 என்ற பதிவு எண்ணுள்ள Hyundai Xcent Taxi கார் - 1 வை பி.ஆர்.எண். 163/2025 என்ற எண்ணில் முன்னிலைப்படுத்தப்பட்டு உரிமையாளர் வசம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேல் முறையீடு இருப்பின் மேல்முறையீடு உத்தரவுப்படி நடக்கவும், மேல் முறையீடு இல்லையெனில் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு அதன் உரிமையாளர் வசம் நிரந்தரமாக ஒப்படைக்கவும், அது சம்மந்தப்பட்ட பிணை இருப்பின் பிணை ரத்தாகவும் உத்தரவிடப்படுகிறது.

N MOORTHY
Digitally signed by N MOORTHY
Date: 2026.06.06 18:49:12 +0530

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜுன் மாதம் 06ம் நாள் இன்று என்னால் சரிபார்க்கப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.06 18:49:17 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

பெருந்துறை.

**அரசு தரப்பு சாட்சிகள்**:-

அ.சா.1 – திருமதி. சம்பூரணம்

அ.சா.2 – திரு. பாலசுப்பிரமணியம்

அ.சா.3 – சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்**

| வரிசை எண் | தேதி | சான்றாவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 27.05.2026 | சமரச மனு |
| அ.சா.ஆ.2 | 30.03.2022 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | 30.03.2022 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 30.03.2022 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 30.03.2022 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.6 | 30.03.2022 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.7 | 30.03.2022 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.8 | 30.03.2022 | படிவம் 91 |
| அ.சா.ஆ.9 | 30.03.2022 | படிவம் 91 |
| அ.சா.ஆ.10 | 29.03.2022 | அ.சா.1 ன் விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.11 | 29.03.2022 | அ.சா.1 ன் காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.12 | 29.03.2022 | அ.சா.2 ன் விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.13 | 29.03.2022 | அ.சா.2 ன் காயச்சான்றிதழ் |



N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.06.06 18:49:23 +0530

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.14 | 29.03.2022 | துரைசாமியின் காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.15 | 15.06.2022 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்று பொருள்கள்:-**

1. சுமார் 74 செ.மீ நீளமுள்ள இரும்பு கம்பி - 1

2. உடைந்த நிலையில் உள்ள சிவப்பு கலர் கைப்பிடி போட்ட பிசிறு வெட்டும் கத்தி - 1

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்:- இல்லை**

**பின்குறிப்பு**

1. எதிரிகள் பிணையில் இருந்து வருகிறார்கள்.
2. வழக்கின் முடிவு காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.
3. அரசு தரப்பு சாட்சிகளை மூன்று வாய்தாவிற்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
4. தீர்ப்பின் நகல் மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

N MOORTHY
Digitally signed by N MOORTHY
Date: 2026.06.06 18:49:28 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

பெருந்துறை.